**Dated : 07.03.2026**

**O.S.No. 46/2024**

**DW.2 – திரு. கிருஷ்ணன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கீழ்குப்பம் புளியம்பட்டியில் வசிக்கிறேன். அந்த இடத்தில் வசிக்கிறேன் என்பதை காட்டுவதற்கு ஆதார் கார்ட் அல்லது வேறு ஏதேனும் ஆதாரம் வைத்திருக்கிறேனா என்றால் வீட்டில் வைத்திருக்கிறேன். பிரதிவாதி ஜெயபால் ரூ.1,00,000/– பணம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி எப்போது, யார் யார் பேசினோம் என்றால் ஊர்கவுண்டர் வெங்கடாசலம், ஊர்காரர்களும், அவரது அண்ணன் தம்பிகளும் பேசி, ஜெயபாலுக்கு அவருடைய தம்பி ரூ.1,00,000/– பணம் கொடுத்தார். இந்த பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பேசும் போது ஜெயபாலுடைய தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். ராஜாராம் அவருடைய தகப்பனார் இறந்த பின்னிட்டு தான் கிணறு வெட்டினார் என்றால் சரிதான். கிணறு வெட்டிய போது அந்த ரூ.1,00,000/– பணம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் கிணறை நாங்கள் தான் வெட்டினோம், கிணறு வெட்டிய போது ஜெயபால் தான் பணம் கொடுத்தார்.

இந்த பஞ்சாயத்து நடந்ததாக சொல்வதும் பொய், ஜெயபால் ரூ.1,00,000/– பணம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் கிணறு வெட்டி கொடுக்கவில்லை, ராஜாராம் வேறு ஒரு நபரை வைத்து தான் கிணறு வெட்டினார் என்று சொன்னால் முதலில் வேறு ஆளை வைத்து தான் கிணறு வெட்டினார்கள், அதற்கு பின்னிட்டு 15 அடி இருக்கும் போது நான் கிணறு வெட்டினேன். நான் கிணறு வெட்டியதாக சொல்வது மேலே 15 அடியா, கீழ் 15 அடியா என்றால் கீழ் 15 அடி. நான் JCB வைத்துள்ளேனா என்றால் கிரேன் வைத்திருக்கிறேன். நான் புளியம்பட்டியில் குடியிருக்கவில்லை, ஜெயபால் கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நிலம் வீடு எனக்கு அந்த பகுதியில் உள்ளது, நான் குடியிருப்பது வேறு இடம். நான் குடியிருக்கும் இடம் வெள்ளாலப்பட்டி.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,

Krishnagiri.